## தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் - 2017

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானச் செலவினக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 2001 இன் 1 ஆம் இலக்க தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவக (கூட்டிணைத்தல்) அதிகாரச்சட்டத்தின் 22 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று நிறுவகத்தின் தலைவருக்கு 2018 ஆகஸ்ட் 14 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

#### இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16

நியமத்தின் 31 ஆம் பந்தியின் பிரகாரம் 2001 ஆம் ஆண்டின் பின்னர் காணி மற்றும் கட்டிடங்களுக்காக மீள் மதிப்பீடு செய்யப்படாதிருந்தமையால் அந்த சொத்துக்களின் நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது மீண்டெழும் செலவினத்திற்காக திறைசேரியிலிருந்து கிடைத்த ரூபா 30,980,000 தொகையான நிதிஏற்பாட்டில் ஆண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 30,610,443 தொகை மாத்திரம் விரிவான வருமானக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் செலவிடப்படாத ரூபா 369,557 தொகை செலுத்த வேண்டியவையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கட்டிட திருத்தங்களுக்காகச் செலுத்த வேண்டிய ரூபா 247,226 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டிற்காக சீராக்க வேண்டிய சட்டத்தரணிக் கட்டணம் ரூபா 66,000 தொகை மீளாய்வாண்டின் இலாபத்தில் சீராக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 746,737,795 கூட்டுத்தொகையான நடைமுறையல்லாச் சொத்துக்கள் தொடர்பான சொத்துப் பதிவேடு மற்றும் பட்டோலைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 06 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 4,675,883 ஆக இருந்ததுடன் அதில் 1 வருடத்திற்கும் 5 வருடங்களுக்கும் இடயிலான காலமாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 3,189,691 ஆகவும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாத மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,486,192 ஆகவும் இருந்தன.

(ஆ) நிறுவகத்திற்குச் சொந்தமான பல்நோக்கு கட்டிடத்தில் கடையொன்று கூட்டுறவு கோப்சிட்டி விற்பனைக் கடைக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்தக் கடைக்காக 2017 மார்ச் முதல் ஆகஸ்ட் வரை மதிப்பீடு செய்யப்பட்ட வாடகை ரூபா 237,895 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

(இ) 2005 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக முன்கொண்டுவரப்பட்ட உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து கிடைக்கவேண்டிய பெறுமதிசேர் வரி (வற்) மீதி ரூபா 37,622,639 தொகை மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 05 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 75,513,623 ஆக இருந்ததுடன், அதில் 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலமாக தீர்க்கப்படாதுள்ள மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 28,139,418 ஆகவும், 05 வருட காலத்தை விஞ்சி தீர்க்கப்படாதுள்ள மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 47,374,205 ஆகவும் காணப்பட்டன.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| | நிதிப்பிரமாணம் 757(2) மற்றும் 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 3 ஆம் பிரிவு | மீளாய்வாண்டில் பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அந்த அறிக்கைகளின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2006 யூலை 14 ஆந் திகதிய 11/2006 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 3(iv) ஆம் பந்தி | தலைவருக்கு ஒதுக்கப்பட்ட கெப் வண்டிக்காக 2017 ஆம் ஆண்டில் எரிபொருள் 2040 லீற்றர் பயன்படுத்தப்பட்டிருந்த போதும் பிரயாணம் தொடர்பான மாதாந்த பொழிப்பு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டிற்காக நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 2,509,280 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 3,671,542 ஆனமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 6,180,822 ஆன அதிகரிப்பொன்று காணப்பட்டது. மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 7,708,790 இனால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 706,772 தொகையான பற்றாக்குறை 2014 ஆம் ஆண்டின் போது மேலும் வீழ்ச்சியடைந்து ரூபா 5,786,120 ஆக இருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 1,156,557 தொகையான மிகை வரை அதிகரித்திருந்தது. மீண்டும் 2016 ஆம் ஆண்டில் ரூபா 3,671,542 பற்றாக்குறைக்கு உள்ளாகியிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 2,509,280 தொகையான மிகை வரை அதிகரித்திருந்தது. எனினும், நிதி விளைவில் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வை மீண்டும் சீராக்கும் போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 10,033,116 தொகையான பங்களிப்பு 2015 ஆம் ஆண்டில் ரூபா 33,845,710 வரை தொடர்ச்சியாக அதிகரித்து மீண்டும் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 26,806,656 வரை வீழ்ச்சியடைந்திருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 33,721,332 வரை அதிகரித்திருந்தது.

### 3.2 நிறுவகத்திற்கு எதிராக அல்லது நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூன்று வெளிநபர்களினால் மீண்டும் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கும் இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் நிறுவகத்திற்கு எதிராக நீதிமன்றத்தில் மூன்று வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

(ஆ) இந்த நிறுவகததில் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் சென்று மரணமடைந்த ஒரு உத்தியோகத்தர் நிறவகத்திற்குச் சொந்தமான அரசாங்க விடுதியில் குடியிருந்த காலத்திற்காக கிடைக்க வேண்டிய ரூபா 425,406 தொகையான நிலுவை விடுதி வாடகை மற்றும் அதற்குரிய வட்டி என்பவற்றை அறவிடுவது தொடர்பாக நிறுவனத்தால் இழப்பீடு கோரி வழக்கு தொடரப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டிணைந்த திட்டம் 2013 - 2017 காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த திட்டத்தில் கற்கைச் செயற்பாடுகளுக்குரிய நோக்கங்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த நோக்கங்களுக்காக காணப்பட்ட சக்தி தொடர்பான பகுப்பாய்வொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், நலிவுகள் தொடர்பாக இனங்காணல்கள் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ)(i) வருடாந்த பாதீட்டில் அபிவிருத்திச் செலவினத்திற்காக ஏற்பட்ட மொத்தச் செலவினமும் கண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தந்த செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட செலவினம் தனித்தனியாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் நிறுவகத்தின் 33 உத்தியோகத்தர்களுக்கிடையே ஏழு பேர் மாத்திரம் மீளாய்வாண்டில் 07 தினங்கள் வெளிப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்துக்காக அனுப்பப்பட்டிருந்தனர்.

(iii) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடன் மீளச் செலுத்தும் திட்டமொன்று சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் கூட்டுறவு நிதியத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 25,000,000 கடன் பணத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம், வருடாந்த பாதீட்டுடன் ஒப்பீடு செய்யக்கூடிய வகையில் தயாரிக்கப்படாதிருந்ததுடன் அதன் காரணமாக பாதீட்டு மதிப்பீடுகளின் பொருண்மையான தன்மையினை கண்டறிவதற்கும் முடியாதிருந்தது.

### 4.1.2 செயற்படுநிலையும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2001 இன் 1 ஆம் இலக்க தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவக (கூட்டிணைத்தல்) அதிகாரச்சட்டத்தின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் நோக்கங்கள் போதியளவான பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) கூட்டுறவு அபிவிருத்திக்குரிய செயற்பாடுகளை மேம்படுத்தும் மற்றும் தொடர்புபடுத்தும் நிலையமொன்றாக செயற்பட வேண்டியிருந்த போதிலும், இந்த நிறுவகத்தின் மூலம் கூட்டுறவு சான்றிதழ்பத்திர பாடநெறிகள் மற்றும் கூட்டுறவு டிப்ளோமா பாடநெறிகள் என்பவற்றை நடாத்துதல் மாத்திரம் காலதாமதத்துடன் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ii) நவீன தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்தி கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான பயிற்சி வழங்க வேண்டியிருந்த போதிலும், நவீன தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தாமல் பாரம்பரிய கற்பித்தல் முறைமையில் பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்தன.

(iii) கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான ஆராய்ச்சிகள் மேம்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டில் எவ்வித ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் ஆராய்ச்சியாளர் மற்றும் உதவி ஆராய்ச்சியாளர் போன்ற பதவிகள் மீளாய்வாண்டில் வெற்றிடமாகக் காணப்பட்டன.

(iv) முகாமைத்துவ திறன் தேவையான கூட்டுறவு முயற்சிகளைக் கையேற்று முகாமைத்துவம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த நோக்கங்கள் தொடர்பில் எவ்வித கவனமும் செலுத்தப்படாதிருந்ததுடன் இலங்கையில் கூட்டுறவு பயிற்சிகள் தொடர்பான பரீட்சிப்பின் போது 07 மாகாணங்களிலுள்ள 9,951 கூட்டுறவுச் சங்கங்களில் 5,996 கூட்டுறவுச் சங்கங்கள் மாத்திரம் செயற்படு நிலையில் காணப்பட்டதுடன், 3,955 சங்கங்கள் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(v) கூட்டுறவு முயற்சிகளுக்கு தொழில்சார் ஆலோசனைகளை வழங்குதல் இடம்பெற வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான ஆலோசனைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(vi) மாதிரிக் கூட்டுறவு கிராமங்கள் மற்றும் வியாபார நிலையங்கள் என்பவற்றைத் தாபிக்க வேண்டியிருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டின் போது பால் கிராம செயற்திட்டம் (கிரி கம்மான) மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும், அது செயற்படாதிருந்ததுடன் அந்த நோக்கங்கள் தொடர்பில் உயர் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) 2001 இன் 01 ஆம் இலக்க தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவக (கூட்டிணைத்தல்) அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் பயிற்சி மற்றும் நிறுவகத்தால் நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் நிறுவகத்தால் நடாத்தப்படுகின்ற பாடநெறிகளுக்காக பாடப்பரப்புக்கள் மற்றும் விடயங்களை அபிவிருத்தி செய்தல் போன்ற பணிகளை நிறைவேற்றுவதற்கு நிறுவகத்தின் கல்விசார் பதவியணியின் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது நிறுவகத்தால் நடாத்தப்பட்டிருந்த பயிற்சி பாடநெறிகளில் மற்றும் உதவி நிகழ்ச்சித் திட்டங்களின் செயல்முன்னேற்றம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யப்பட்டு கீழே காண்பிக்கப்படுகின்றது.

(i) மீளாய்வாண்டின் போது குறுங்கால பயிற்சி பாடநெறிகள் 21 ஐ நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியாக 19 பாடநெறிகளே நடாத்தப்பட்டிருந்தன.

(ii) பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்காக கிடைத்த மக்கள் வங்கி மானியங்களில் ரூபா 440,253 தொகை சேமிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் மக்கள் வங்கி நிதி உதவியின் கீழ் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

(iii) முன்னைய ஆண்டுகளின் போது கூட்டுறவுத் துறையின் நலனை நோக்கமாகக் கொண்டு இலவசமாக பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அந்தப் பாடநெறிகள் நடாத்துதல் கைவிடப்பட்டிருந்தது.

(ஈ) நிறுவகத்தின் தொழில்பயிற்சி வழிகாட்டியின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய செயலாற்றல் குறிகாட்டிகள் தயாரிக்கப்படாமையின் காரணமாக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கியுள்ள பணிகள் தொடர்பாக அவற்றின் பூர்த்தி மட்டத்தை அளவிட முடியாதிருந்தது.

(உ) 2017 மற்றும் 2018 இன் பயிற்சி வழிகாட்டியின் பிரகாரம் கூட்டுறவு ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு நோக்கங்களை அடைந்து கொள்ளும் வகையில் ஆராய்ச்சி பிரிவு கற்கைப் பிரிவுடன் தொடர்புபடுத்தப்பட்டு ஸ்தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் அது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) செவிப்புல, கற்புல பிரிவின் வருமானம் 2012 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை ரூபா 833,501 முதல் ரூபா 152,360 தொகை வரை வீழ்ச்சியடைந்திருந்தது. நிறுவகத்தால் 65 பாடநெறிகள் நடாத்தப்படுகின்ற போதிலும், நவீன உபகரணங்களைக் கொண்ட கட்புல செவிப்புல பிரிவு 2017 ஆம் ஆண்டின் போது நிறுவக பயிற்சி தேவைகளுக்காக 04 பாடநெறிகளுக்காக மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

(எ) 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 1,786,500 உழைக்கும் எதிர்பார்ப்பில் திட்டமிடப்பட்ட 09 குறுங்கால மற்றும் தொழில்பயிற்சி பாடநெறிகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இந்த நிறுவகத்தில் நடாத்தப்படுகின்ற தொழில்பயிற்சி பாடநெறிகளுக்கு பங்குபற்றுகின்ற பயிற்சியாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவானமையால் விரிவான விளம்பரம் ஒன்றை வழங்குவதன் மூலம் பயிற்சி பெறுநர்களின் அளவினை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்திற்குச் சொந்தமான சுற்றுலா விடுதி 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 16,000,000 செலவில் ஆடம்பர சொகுசு முறையில் அபிவிருத்தி செய்து அமைச்சர் மற்றும் அவரின் பதவியணியினர்கள் மாத்திரம் அதில் வரையறுக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 29,965 மாத்திரமாக இருந்ததுடன் 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை 05 வருடங்களின் வருமான முறையில் ரூபா 588,595 முதல் ரூபா 29,965 வரை குறைவடைந்திருந்தது.

(இ) P-12 என்ற அரசாங்க விடுதி 11 வருடங்கள் அளவிலான காலம் உடன்படிக்கையின்றி வ/ப மஹாவலி கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்டு வாடகை அறவிடப்படாமையின் காரணமாக ரூபா 187,200 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை அரசாங்கம் இழந்திருந்தது.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்டிருந்த வினைத்திறனான போட்டிக்காக திறக்கப்பட்ட வங்கிக் கணக்கில் 2007 ஆம் ஆண்டிலிருந்து கொண்டுவரப்படுகின்ற மீதி ரூபா 238,855 தொகை 10 வருட காலத்தில் எவ்வித ஆக்கபூர்வமான பணிகளிலும் ஈடுபடுத்தப்படாமல் வங்கிக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ஒவ்வொரு பாடநெறிகளுக்கும் பங்குபற்ற வேண்டிய பயிற்சி பெறுனர்களின் அளவைத் தீர்மானிக்காமல் பயிற்சி வழிகாட்டி தயாரிக்கப்பட்டிருந்தது.

(இ) 2017 ஆம் ஆண்டின் பாதீட்டின் பிரகாரம் நவீன வசதிகளையுடைய கலையரங்கத்திலிருந்து ரூபா 5,616,000 வருமானமொன்றை உழைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 17 சந்தர்ப்பங்களின் போது ரூபா 4,968,750 தொகை மாத்திரமே உழைக்கப்பட்டிருந்தது.

### 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

2015 ஆம் ஆண்டில் உத்தியோகபூர்வ இல்லங்களைத் திருத்துவதற்காக தேசிய பாதீட்டுத் திணைக்களத்திடமிருந்து கிடைத்த ரூபா 7,000,000 தொகையான நிதிஏற்பாடு நூலகத்தை திருத்துவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

**4.5 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டின் போது நிறுவகத்தில் பயிற்சி பாடநெறிகளின் தரத்தை மேம்படுத்தும் செயற்திட்டத்திற்காக தேசிய பாதீட்டுத் திணைக்களத்திடமிருந்து கிடைத்த ரூபா 6,000,000 தொகையிலிருந்து ரூபா 3,498,291 தொகை 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்படாமல் நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவகத்தின் கலையரங்கத்தை நிர்மாணிப்பதற்காக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 68,445,000 தொகையிலிருந்து ரூபா 38,445,000 தொகை செலவிடப்படாமல் 2017 திசெம்பர் 31 வரை நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**4.6 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் இல B - 13 என்ற பழைய கட்டிடத்தில் 07 அலுவலக அறைகள் 2008 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டதுடன் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் நிரற்படுத்தப்பட்ட அரசாங்கத்தின் விடுதி 2015 சனவரி 05 ஆந் திகதி முதல் 2017 திசெம்பர் 31 வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமையினால் அரசாங்கத்திற்கு ரூபா 214,027 தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட வீட்டு வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது. பணிப்பாளர் நாயகம் பதவியின் சேவைக்காக இரண்டாம் நிலை அடிப்படையில் உத்தியோகத்தர்களைச் சேர்த்தல் இதற்கான காரணமாக இருந்ததாக கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) நிறுவகத்திற்குச் சொந்தமான 3 அரசாங்க விடுதிகள் 2012 ஆம் ஆண்டு முதல் 2017 வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் மூடிவைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 270,850 தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(இ) பல்நோக்கு கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த கூட்டுறவு கோப்சிட்டி விற்பனை நிலையம் 2017 செப்தெம்பர் மாதம் முதல் மூடி விளைவற்றுக் காணப்பட்டதுடன் வெளித்தரப்பினருக்கு வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக ரூபா 240,000 தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

**4.7 இனங்காணப்பட்ட நட்டம்**

2014 யூன் 01 அந் திகதி விபத்துக்குட்பட்டிருந்த நிறுவகத்திற்குச் சொந்தமான மோட்டார் வாகனமொன்று இயந்திரப் பொறியியலாளரின் பரிசோதனையின்றியும் பழுதுபார்த்தல் தொடர்பான மதிப்பீடு பெறப்படாமலும் ரூபா 247,332 செலவில் பழுதுபார்க்கப்பட்டிருந்தது. எனினும், விபத்தின் பின்னர் பழுதுபார்த்தல் சரியான பிரகாரம் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக 1332 கிலோமீற்றர் அளவில் பிரயாணம் செய்யக்கூடியதாக இருந்ததுடன், அதன் பின்னர் பயன்படுத்த முடியாமல் விளைவற்றுக் காணப்பட்டது. மேற்கூறப்பட்ட விபத்து தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் நட்ட இழப்பு ஏற்பட்ட திகதி முதல் மூன்று மாதங்களுக்குள் பூரணமான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2018 யூன் 29 ஆந் திகதி வரையிலும் பூரண அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.8 முறையான பிரகாரம் கையேற்கப்படாத காணிகள் / ஆதனங்களில் செயற்திட்டத்தை ஆரம்பித்தல்**

நிதிப்பிரமாணம் 315(1) இன் பிரகாரம் நிறுவகம் அமைந்துள்ள 26 ஏக்கர் காணி கையேற்கப்படாதிருந்ததுடன் இந்த நிறுவகத்திற்கு அடுத்தாலுள்ள காணி உரிமையாளரால் அனுமதியற்ற வகையில் பிடித்து வைக்கப்பட்டிருந்தது. இந்த சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் அது தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நிறுவகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.9 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட 16 பதவிகளில் 36 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர் (கற்கை மற்றும் அபிவிருத்தி) என்ற இரண்டு பதவிகளுக்காக நிரந்தர உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு அதிகாரத்தரப்பினர் கவனம் செலுத்தாது 2001 ஆம் ஆண்டு முதல் இரண்டாம் நிலை அடிப்படையில் உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டமையின் காரணமாக, நிறுவகத்தின் இலக்கான நிலைபேறான இருப்புடன் இயைபான பூகோள தொடர்புடன் புத்துணர்வுடன்கூடிய கூட்டுறவு தொழில் முயற்சியொன்றை ஸ்தாபிக்கும் நோக்கத்தை அடைய முடியாதிருந்தது.

**4.10 வாகனப் பயன்பாடு**

நிதிக்குத்தகை அடிப்படையின் கீழ் பெறப்பட்டிருந்த கெப் வண்டி குத்தகைத் தவணை செலுத்தி முடிவடைந்திருந்தும் வண்டியின் உரித்தை நிறுவகத்திற்கு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.11 சந்தைப் பங்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணனி ஆய்வுகூடத்திற்குரிய 84 கணனிகள் அளவில் காணப்பட்ட போதிலும், அதில் 77 சதவீதமான அளவு 2010 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டு 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய கணனிகளாகும். இலக்கிடப்பட்ட குழு க.பொ.த (சா.தரம்) பயின்ற 16 வயதிற்கு மேற்பட்ட கணனி அறிவுடன் உள்ள தொகுதியினர் ஆக இருந்தமையின் அடிப்படையில் காலாவதியான தொழில்நுட்பத்துடன் மத்திய செயற்பாட்டு அலகு (CPU) பயன்படுத்துகின்றமையால் பயிற்சி பெறுபவர்களின் ஆர்வம் குறைவடைந்திருந்தது.

(ஆ) பயிற்சி வழிகாட்டியில் தொழில்சார் பயிற்சி பிரிவு, மூன்று நிறுவனங்களின் வளங்கள் கற்பித்தல் நிலையமாக செயற்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2018 பெப்ரவரி 05 ஆந் திகதி வரையிலும் அந்த நிறுவனம் தொடர்பாக எந்தவொரு தொழில்சார் பாடநெறியும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவகத்தின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக இலக்கிடப்பட்ட குழு கவர்ச்சி கொள்வதற்கு ஏற்றவகையில் நிறுவகத்தின் பாடநெறிகளை ஈடுபடுத்துவதற்கு பல்வேறு விற்பனை மேம்படுத்தல் தந்திரோபாயங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளுதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் சகல அரச நிறுவனங்களினாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரியதாக நிறுவகத்தால் தமது விடயப் பரப்பின் கீழ் காணப்படுகின்ற பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டியுள்ளது தொடர்பாக விளக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 27 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 6.2 உள்ளகக் கணக்காய்வு

நிறுவகத்தில் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று அமுல்படுத்தப்படுகின்ற போதிலும், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு சுட்டிக் காண்பித்த உள்ளகக் கட்டுப்பாடுநலிவுகளை சீர்செய்வது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

### 6.3 பெறுகை மற்றும் ஒப்பந்த செயல்முறைகள்

#### 6.3.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருடாந்த பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்ட பெறுகை செயற்பாடுகளை ஆரம்பிக்கும் திகதி மற்றும் பூர்த்தி செய்யப்படும் திகதி என்பன காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் பெறுகைத்திட்டத்தின் பிரகாரம் கொள்வனவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த கலையரங்கத்திற்கான கெமரா முறைமை, தொலைக்காட்சி மற்றும் முத்திரை குத்தும் இயந்திரம், (Franking Machine) என்பன 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 911,342 தொகையான ஆகக் குறைந்த கேள்வி நிராகரிக்கப்பட்டு அதனை விட ரூபா 167,658 கூடுதலான கேள்வி சமர்ப்பித்த நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், முதலாவது கேள்வி நிராகரிக்கப்பட்டமைக்கான காரணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட நிறுவகத்திற்குச் சொந்தமான அரசாங்க விடுதிகளை திருத்தம் செய்வதற்காக ரூபா 7 மில்லியன் திறைசேரியிலிருந்து ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நடவடிக்கைகள் ஆண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 6.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 2,151,777 தொகையான புதிய றத்னாயக்க விடுதியின் மின்சார முறையை புதிதாக வழங்கப்பட்ட திறைசேரி நிதிஏற்பாட்டின் மூலம் ரூபா 2,276,256 செலவில் 2016 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றப்பட்டிருந்தது. எனினும், புதிதாக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டதன் பின்னரும் முன்னைய நிலையைப் போன்றே மின்சாரம் துண்டிக்கப்பட்டமையால் அதற்காக பயன்படுத்தப்பட்ட மொத்த பணமும் விளைவற்ற செலவினமாகியிருந்தது.

## 6.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாதீடானது இயலுமான வரை சரியானதாகவும் பொருத்தமானதாகவும் தயாரிக்கப்பட்டு பாதீடு செய்யப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு செயற்படுத்துவதற்குப் பதிலாக நிறைவேற்றப்பட்ட சீராக்கங்களுக்கு ஈடாகும் வகையில் பாதீடு அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு திருத்தப்பட்ட பாதீடொன்று தயாரிக்கப்பட்டு 2017 ஆகஸ்ட் 03 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) திருத்தப்பட்ட பாதீட்டு வருமானத்தையும் செலவினத்தையும் உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடு செய்த போது 17 விடயங்களில் 10 சதவீதம் முதல் 540 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டன.

## 6.6 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்தி

நிர்வாக சபையின் அங்கீகாரமின்றி 2012 சனவரி 22 ஆந் திகதி முதல் 2015 சனவரி 03 ஆந் திகதி வரை 59 நாட்களில் கடமை ரீதியற்ற பிரயாணங்களுக்காக நிறுவகத்தின் பேரூந்து 14,644 கிலோமீற்றர் ஓட்டத்தில் ஈடுபட்டமைக்காக ரூபா 1,034,765 தொகையை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.7 சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் சுத்திகரிப்பு மற்றும் பூங்கா அபிவிருத்தி சேவைகளை நிறைவேற்றுகின்ற நிறுவனம் உடன்படிக்கையின் பிரகாரம் தேவையான இரசாயனப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்காதிருந்ததுடன் சேவையினையும் முறையாக வழங்கியிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தின் சூழலில் விடுதி முகாமையாளரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு முன்பக்கமாகவுள்ள பழைய எண்ணெய் தாங்கி, காடுகள் வளர்ந்து காணப்பட்டதுடன் விடுதிகளிலிருந்து அகற்றப்படுகின்ற போத்தல், பொலித்தீன் மற்றும் ஏனைய கழிவுப் பொருட்கள் அதனுள் அகற்றப்பட்டிருந்தது. இதன் மூலம் வெளி அலங்காரம், விடுதியாளர்களினதும் உத்தியோகத்தர்களினதும் சுகாதார நிலைமை மற்றும் நுளம்புகள் பெருக்கமடைதல் போன்ற பாதகமான அச்சுறுத்தல் ஏற்படுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தமையை கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதிருந்தது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது நிறுவகத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்படாமை, வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்படாமை மற்றும் நிலையான சொத்துக்கள் குறைவாகப் பயன்படுத்தியமை |
| (ஆ) | களஞ்சியக் கட்டுப்பாடு | களஞ்சிய கடமைகள் அலுவலக உதவியாளருக்கு கையளிக்கப்பட்டமை மற்றும் களஞ்சியப் பதிவேடு சரியான பிரகாரம் பேணப்படாமை. |
| (இ) | ஊழியர் நிர்வாகம் | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை, உத்தியோகத்தரின் கல்விசார் மற்றும் தொழில் தகைமைகள் உரிய நிறுவனங்களிலிருந்து உறுதிப்படுத்திக் கொள்ளாமை, வினைத்திறமை காண் தடைப் பரீட்சையை நடாத்துதல் காலரீதியில் மேற்கொள்ளப்படாமை, உத்தியோகத்தர்களுக்கு குறித்த காலங்களில் வருடாந்த சம்பள அதிகரிப்பு மற்றும் பதவி உயர்வுகள் வழங்கப்படாமை. |
| (ஈ) | ஒப்பந்த நிர்வாகம் | நிர்மாணம் தொடர்பாக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்படாமை மற்றும் நிர்மாண செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணம் காலரீதியில் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமை. |
| (உ) | பயிற்சி பாடநெறிகளை நடாத்துதல் | பிரதான நோக்கமான கூட்டுறவு மேம்பாட்டுக்கான திட்டமிடலுடன் கூடிய பயிற்சி நடவடிக்கைகள் முன்னேற்றப்படாமை, பயிற்சி பாடநெறிகளின் செயல்முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை மற்றும் நவீன தொழில்நுட்ப திட்டத்தை உபயோகித்து பயிற்சியளித்தலை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |